மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்! கலைஞருடன் நட்புக் கொண்டவர்!

# முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 100வது பிறந்த நாளில் தமிழ்நாட்டிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நினைவு கூர்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 26-

மதச்சார்பின்மையை பேணிக் காத்தவர்களிடம் நட்பு கொண்டவர். தமிழ்நாட்டின் மேம்பாட்டிற்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் ஆற்றிய பணியை அவரது 100வது பிறந்த நாளில் நினைவு கூர்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் நூறாவது பிறந்தநாளில் தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய பங்களிப்பினையும், நமது தலைவர் கலைஞர் அவர்களுடன் அவர் கொண்டிருந்த நட்புறவினையும் நினைவுகூர்கிறோம்.**

**வலதுசாரிக் கருத்தியல் கொண்டவராக இருந்தாலும், பிரதமர் பொறுப்பில் இருந்தபோது நாட்டின் மதச்சார்பின்மைப் பண்பை அவர் பேணிக்காத்தார். அவரது வாழ்வும் பணியும் நிலைத்து நிற்கும்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கழக மருத்துவ அணி உறுப்பினர் அடையாள அட்டையை வெளியிட்டார்கள். கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமைக்கழக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், மருத்துவ அணி மாநில செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, மருத்துவ அணி மாநிலத் தலைவர் மரு கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி, மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு.கலை கதிரவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக செய்தி தொடர்புச் செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவர் பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை மேற்கு மாவட்டப் பொருளாளர் அகஸ்டின் பாபு கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி தனது மகனுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், மாநில சிறுபான்மை ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண் கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சிங்கப்பூர் நாட்டில் அமைந்துள்ள Gardens by the Bay எனும் நகர்ப்புற பூங்காவை அரசுப் பள்ளி மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இயற்கையின் அவசியத்தை உணர்த்தும் இந்தப் பூங்கா 260 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 1.5 மில்லியனுக்கும் அதிகமான தாவரங்களைக் கொண்டுள்ள இப்பூங்காவினை இதுவரை 100 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்கள் பார்வையிட்டு உள்ளார்கள். இயற்கை ஆர்வலர்களும், அறிவியலாளர்களும் வியந்து பார்க்கும் Gardens by the Bay பூங்காவினை மாணவச் செல்வங்களுடன் இணைந்து பார்வையிட்டதில் மகிழ்ச்சி என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிவிட்டுள்ளார்.